**செய்தி வெளியீடு எண்:067** **நாள் : 30.01.2016**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.1.2016 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியினை “பெருநகர சென்னை மாநகராட்சி” என அறிவித்து காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் துவக்கி வைத்தார்கள். மேலும், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் களைந்து, தீர்வுகாணும் வகையில், அம்மா மக்கள் சேவை மையங்களை துவக்கி வைத்து, சென்னை மாநகராட்சியின் சார்பில் 36 கோடியே 26 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான அம்மா உணவகங்கள், உயர்மட்ட பெட்டக வடிவ பாலம், தொழுநோயாளிகளுக்கான மருத்துவமனை, பேருந்து நிலையம், அங்கன்வாடி மையங்கள், சமுதாயக் கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களையும், நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் 81 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான உயிரி எரிவாயு கூடங்கள், பேருந்து நிலையம், குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள், அலுவலகக் கட்டடங்கள், சுகாதாரப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகராட்சியானது 10 மண்டலங்கள், 155 வார்டுகளுடன் 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் செயல்பட்டு வந்தது. பின்னர் காஞ்சிபுரம் மற்றும திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு, அதன் பரப்பளவினை 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்ததைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சியினை “பெருநகர சென்னை மாநகராட்சி” எனப் பெயர் மாற்றம் செய்து 26.10.2015 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியினை “பெருநகர சென்னை மாநகராட்சி” எனத் அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மேலும், திருவொற்றியூர், திரு.வி.க.நகர், இராயபுரம், அம்பத்தூர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், சோழிங்கநல்லூர், தண்டையார்பேட்டை ஆகிய மண்டலங்களில் 8 கோடியே 25 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 31 அம்மா உணவகங்கள்;

ஜெ.ஜெ. நகர் – பாடிக்குப்பம் சாலையில் 1 கோடியே 44 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட பெட்டக வடிவ பாலம்; மணலியில் 4 கோடியே 96 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள லாரிகள் நிறுத்தும் நிலையம்; கொரட்டூரில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம்;

சின்ன கொடுங்கையூர் – சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் மாதவரம், குளக்கரை – சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 1 கோடியே 61 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

சென்னை மாநகராட்சியின் அனைத்து சமுதாய கூடங்களின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாத்திரங்கள், மேஜைகள், நாற்காலிகள் வழங்குதல்; மேற்கு முகப்பேர், ஆயிரம் விளக்கு – கிரியப்பா சாலை, மற்றும் சோழிங்கநல்லூர் – கஜராஜன் சாலை ஆகிய இடங்களில் 6 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 சமுதாயக் கூடங்கள்;

சென்னை மாநகராட்சியின் சார்பில் மாடம்பாக்கத்தில் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழுநோயாளிகளுக்கான மருத்துவமனை; 1 கோடியே 64 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 அங்கன்வாடி மையங்கள்; 1 கோடியே 17 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 உடற்பயிற்சி கூடங்கள்; 4 கோடியே 53 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 9 பூங்காக்கள்; 1 கோடியே 74 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மதிபபீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு பகுதி மற்றும் மூன்று வார்டு அலுவலகக் கட்டடங்கள்; வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிடம்;

வேளச்சேரி பிரதான சாலை – சைதாப்பேட்டை மற்றும் கொரட்டூர் ஆகிய இடங்களில் 45 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கூடங்கள்; திருவான்மியூர் – கலாக்ஷேத்திரா சாலையில் 23 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சலவை தொழிலாளர்களுக்கான இருப்பு அறை; அம்பத்தூர் – தாங்கல் ஏரியில் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இறுதி சடங்கு மண்டபம்; பாடி – செல்லியம்மன் நகரில் 25 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் விளையாட்டு திடல்; அசோக் நகர் மற்றும் அம்பத்தூர் – ரேடியல் ஹவுஸ் ஆகிய இடங்களில் 21 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சத்துணவு மையக் கட்டடங்கள்;

என மொத்தம் 36 கோடியே 26 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்டுள்ள அம்மா உணவகங்கள், உயர்மட்ட பாலம், பூங்காக்கள், சமுதாயக் கூடங்கள், பேருந்து நிலையம், அலுவலகக் கட்டடங்குளூ உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் களைந்து, தீர்வுகாணும் வகையில் அம்மா மக்கள் சேவை மையங்கள்;

காரைக்குடி, தாராபுரம், வந்தவாசி, திருச்செங்கோடு ஆகிய நகராட்சிகளில் 51 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்;

திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் காங்கேயம் நகராட்சியில் 5 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள்; ஈரோடு மாநகராட்சியில் 1 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல அலுவலகக் கட்டடம்;

திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் சங்கரன்கோவில் நகராட்சியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்புகள்;

கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் 5 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 6 உயிரி எரிவாயு கூடங்கள்;

ஆவடி, கும்பகோணம், பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கரூர், பொள்ளாச்சி, நாகப்பட்டினம், நாகர்கோவில், ராஜபாளையம், மேட்டுப்பாளையம் ஆகிய நகராட்சிகளில் 9 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 11 உயிரி எரிவாயு கூடங்கள்;

விருதுநகர் மாவட்டம் – திருத்தங்கல் நகராட்சியில் 3 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையம்;

என மொத்தம் 81 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அம்மா மக்கள் சேவை மையங்கள், உயிரி எரிவாயு கூடங்கள், பேருந்து நிலையம், குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள், அலுவலகக் கட்டடங்கள், சுகாதாரப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா, சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா.துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**